உவமைக்கவிஞர்

சுரதா

சுவரும் சுண்ணாம்பும்

மணிவாசகர் பதிப்பகம்

சுவரும் சுண்ணாம்பும்

உவமைக் கவிஞர் சுரதா

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை
சென்னை–600108

நூல் : சுவரும் சுண்ணாம்பும்

புதிய பதிப்பு : சூன், 2010

திருவள்ளுவர் ஆண்டு : 2041

விலை : ரூ. 50.00

மொத்தப் பக்கங்கள் : 96

அளவு : (டெம்மி) 1x8

மணிவாசகர் வெளியீட்டு எண் : 1709

முகப்பு அட்டை மற்றும்
பக்க வடிவமைப்பு:
எம்.ஏ. பாலாஜி
அம்மா கணினியகம், சென்னை–17.

நினைவில் வாழும் நிறுவனர்
ச. மெய்யப்பனார்

அண்ணாமலைப்
பல்கலைக் கழக
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.
பல்கலைக் கழகங்கள்
பலவற்றில் அறக் கட்டளைகள்
நிறுவியுள்ளார்.
'வள்ளுவம்' இதழின்
நிறுவன ஆசிரியர்.
குன்றக்குடி அடிகளார்
'தமிழவேள்' என்றும்,
தருமபுரம் ஆதீனத் தலைவர்
'செந்தமிழ்க் காவலர்' என்றும்
விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.
'பதிப்புச் செம்மல்' என
அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

நூல்கள் கிடைக்குமிடம்:
மணிவாசகர் நூலகம்
12–B, மேலச் சன்னதி,
சிதம்பரம் – 608001.
தொலைபேசி: 230069

31, சிங்கர் தெரு,
பாரிமுனை, சென்னை – 600108.
தொலைபேசி: 25361039

6, சிவஞானம் தெரு,
தி.நகர், சென்னை – 600017.
தொலைபேசி: 24357832

110, வடக்கு ஆவணி மூல வீதி,
மதுரை – 625001.
தொலைபேசி: 2622853

15, ராஜ வீதி,
கோயமுத்தூர் – 641001.
தொலைபேசி: 2397155

78, செரி சாலை,
சேலம் – 636001.
தொலைபேசி: 3207722

28, நந்தி கோயில் தெரு,
திருச்சி – 620002.
தொலைபேசி: 2706450

அச்சிட்டோர்: மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை–600 021.
தொலைபேசி: 25954528

ராஜ்ய சுலோசனா

மற்றொரு திருமணம் முற்றிய பின்னர்
தான்நிலா என்பது தெரிந்தும், கணவரொடு
தேன்நிலா கண்டு, வீடு திரும்பிய
ரகசியச் சுவைக்கடல் ராஜ சுலோசனா
வைகாசித் திங்கள் பதிமூன்றாந் தேதி,
ஆடினார் நடனம், ஐதரா பாத்திலே!

மெய்எழுத்து நடிகர்

புளிய மாநகர் பி.எஸ்.கோ. விந்தன்
போஜன் என்தங்கை போன்ற படங்களில்
நடித்துப் புகழ்பெற்ற நல்ல நடிகர்.

உலகத்தோடே ஒட்ட ஒழுகி,
அன்பொடு பழகி வந்தஅந் நடிகரோ
கிட்டப்பா குரலை எட்டிப் பிடித்துப்
பாடிக் காட்டிய பச்சைத் தமிழர்!

பாரதி தாசனின் பாடல் பித்தர்;
சின்னப்பாவின் சிறந்த நண்பர்;
நாடகச் சிங்கம்; நடிகரில் கவிஞன்!

சொந்தக் குரலிலே பாடியும், நடித்தும்
வந்தஅந் நடிகர், வைகாசித் திங்கள்
பத்தாந் தேதி மாலை
மரணமடைந்தார் மாரடைப் பினாலே!

தேவிகளும், தேவியும்!

அன்று,

பணமோ கம்அற்றுப் பருவமோ கம்பெற்ற'
வனமோ கினிக்கொரு தவமணி தேவி;

பொன்கோடு போடும் மின்னல் கொடிக்கோ
அழகி ஆர்.பி. லெட்சுமி தேவி;

மங்கம்மா சபதத் திற்கோ வைஜயந்தி
மாலாவின் அன்னை வசுந்தரா தேவி;

கரும்புபோல் ருசிரசம் கொடுத்த கன்னியின்
காத லிக்கோர் அஞ்சலி தேவி:
கலைஞர் கருணா நிதியார் தீட்டிய
மந்திரி குமாரிக்கு மாதுரி தேவி:

இன்று,
வெள்ளித் திரையில் வெளிவந் துலவும்
சரிபாதி படங்களில் சரோஜா தேவி;
என்ற நிலைமையே இன்றைய நிலைமை!

இந்த நிலைமை இனியும் வளர்ந்தால்
மற்றவர் கலைத்திறன் மங்கிப் போகுமே!

சினிமா நடிகையின்

சிறுகதை

காரணம் இன்றிக் கதைகளும், கதைகளின்
தோரணம் இன்றித் தொடர்ச்சியும் இல்லை.

கதையெல்லாம், வார்த்தை வெடிப்புகள், கட்டுக்
கதையெல்லாம் கற்பனை கலந்த தடிப்புகள்!

தடிப்பும் வெடிப்பும் தங்கிய கதைகளைச்
சொல்லத் தெரிந்தவர் சொல்லியும், ஒழுங்காய்
எழுதத் தெரிந்தவர் எழுதியும் வந்தால்,
சிறுகதைக் கொத்தும் சிறந்து விளங்கும்;
படிக்கின்ற உணர்வும் பாழ்படாதிருக்கும்.
ஆனால் இன்றோ அப்படி இல்லை!

யாப்பறி யாதவன் பாப்புனைந் திடலாம்
மடையனும் பாராளு மன்றம் செல்லலாம்!
என்னும் இழிநிலை ஏற்பட்டு விட்டது!

பிரவசனம் பேசும் பெரியவாள் எல்லாம்
எட்டு லட்சுமிகள் இருப்பதாய்ச் சொல்லுவர்.
எட்டு லட்சுமிகள் உண்டோ இல்லையோ
எட்டும் லட்சுமிகள் உண்டு! சந்தனப்
பொட்டு லட்சுமிகள் புவிமீதில் உண்டு!

வெள்ளித் திரைப்பட விநோதினி என்னும்
நடிகை லட்சுமியோ "நானும் சிறுகதை
எழுதுவேன்; வீட்டில் எழுதியும் வருகிறேன்"
என்று சொல்கிறார்! என்ன துணிச்சல்!

கால்பங்கு நடிப்பும், அரைப்பங்கு துடிப்பும்
வேல் தங்கும் விழிகளால் மீதி விவரமும்
சொல்லக் கூடிய சொகுசு நடிகை
எதற்குவீண் முயற்சியில் ஈடுபட வேண்டும்?
கற்றவர் போற்றிப் புகழும்
மற்றவர் கதைகளை வாசித்தால் போதுமே!

ஐயோ!

கொம்பு குத்தும்!

ஆடும் மாடும் அழகுள்ள மான்களும்
குத்தக் கூடிய கொம்பு விலங்குகள்

சங்கு போன்ற தலையுள்ள யானையோ
வாய்தனில் கொம்பு வைத்துள்ள விலங்கு.

கொம்பும் அம்பும் குத்தும்; அதுபோல்
எழுத்தின் தலையில் இருக்கும் கொம்புகள்
கொட்டகை மாடுபோல் குத்துவ தில்லை.

எல்லப்ப நாவலர் எதிரி யாகிய
ஐயங்கார் ஒருநாள் அந்தி மாலையில்
மாடொன்று முட்டி மரண மடைந்தார்.

கொம்புளதற்கு ஐந்தும்; குதிரைக்குப் பத்தும்;
ஆனையைக் கண்டால் ஆயிரம் அடிகளும்;
விலகினால் ஆபத்து நமைவிட்டு விலகும்.

சாமர்த்திய நடிகை சவுகார் ஜானகி
அதட்டல் உருட்டலுக் கஞ்சவே மாட்டார்.
ஆயினும் அந்த அனுபவ நடிகையோ
காளை மாட்டைக் கண்டஞ்சு வாரம்.

கொம்புக்கு அஞ்சும் ஒருசிலர், குழாயடி
வம்புக்கும் அஞ்சினால் சண்டை வராதே!

'சுமைதாங்கி' விஜயா!

மைசேர்ந்த புருவமும்; மான்சேர்ந்த பார்வையும்;
பொய்சேர்ந்த நடிப்பும்; பூரித்த புகழும்
பெற்று விளங்கும் பெரிய நடிகை
கே. ஆர். விஜயா, 'தாயார் விஜயா'
ஆவார் எனும்பேச் சடிபடக் காரணம்
இல்லாமல் இல்லை! எனினும் இரண்டொரு
திங்கட்குப் பின்னர் தெரியும். அதுவரை
உங்கள் உதடுகள் ஓய்ந்திருக் கட்டுமே!

விளையாடும் வெண்ணிலா

விஜய நிர்மலா, விளையாடும் வெண்ணிலா
என்பது பலரின் எண்ண மாகும்!
படாதி பதிகளின் பறவையாம்! பக்குவம்
கெடாத நடிகையாம்; கிளிமொழி மங்கையாம்!
அந்த நடிகை, அப்படி இப்படி
அன்னம் போலே அசைந்து நடக்கையில்

மெல்லிய புடவை மெல்ல நழுவிடின்
என்ன செய்வதென் றெண்ணியோ என்னவோ,
கௌவிப் பிடிக்கும் கவுன்உடை உடுத்து
நடித்து வருகிறாள்! இதனால்,
துடிக்கும் இளைஞரின் தூக்கம் கெடுமே!

இலந்தைப் பழம்!

வாட்டும் முன்பனி வருகை தருகையில்
தின்னும் இலந்தை திரண்டு பழுக்கும்

முள்மரக் கிளையில் முற்றிப் பழுக்கும்
இலந்தைப் பழத்தை 'இரத்தி' என்றும்,
'கோண்டை' என்றும் கூறுவர் புலவர்.

மாவும் பலாவும் வாழைப் பழமும்
பாடல் பெற்ற பழங்க ளாகும்!

கால மறிந்து கனியும் இலந்தை,
பாடல் பெறாத பழமே ஆயினும்
மக்கள் விரும்பும் சர்க்கரைக் கனிதான்.

தமிழரும் பிறரும் சப்பித் துப்பும்
கொட்டையும் சதையும் கொண்ட இலந்தைப்
பழத்தின் அருமை பெருமையைப் பற்றிய
விளக்கமொன்றுள்ளதாம் வெளிவந் துள்ள
பணமா பாசமா என்னும் படத்திலே!

விஜயாவின் முதல் வெளியீடு

குழந்தை பெறாத கோதை இல்லம்
அழகிய தாயினும் அஃதோர் 'வீண்இல்!'
குழந்தை ஈன்றிட இடந்தரும் இல்லம்
எதுவோ அதுவே 'ஈன்இல்' ஆகும்.
வேலா யுதத்தின் மேலான மனைவி
கிடங்கு நடிகை கே. ஆர். விஜயா
திருவனந்தபுரத்திற்குச் சென்றுள்ளார்; ஏனெனில்,
'ஈன்இல்' அந்நகர் ஏற்ற தென்பதால்!
தாயொடு சென்று தானுமோர் தாயாய்ச்
சேயொடு திரும்புவார் சென்னைக்கு விரைவிலே.

தொங்கும் கூந்தல்

தமிழ்ப்பட உலகில் சதைசா வித்திரி
நடிப்பை மிஞ்சும் நடிகைய ரில்லை!
அந்த நடிகையின் அழகிய கூந்தல்
இருண்டும் சுருண்டும் இருப்ப தோடு,

காடுபோல் அடர்ந்தும் காட்சி யளிக்குமாம்!
மோதும் நடிப்பில் முன்னேறும் நடிகை
சோதி லட்சுமிக்குத் தொங்கும் கூந்தல்
ஆலம் விழுதுபோல் அவ்வளவு நீளமாம்!

முடியலங் கரிப்பதில் முதல்வராய்த் திகழும்
மலேசிய நண்பர் மகாலிங்கம் என்பவர்
இவ்வா றுரைக்கிறார். இதனை
எவ்வாறு மறுத்திட இயலும் தோழரே!

சரச தேவிக்குச் சரியான பட்டம்!

சரச தேவியாம் சரோஜா தேவி
'கைபடாத ரோஜா' என்னுமோர் கட்டுரை
தினத்தந்திக் கெழுதிய திரைப்பட நடிகை
என்பது தெரிந்ததே! இசைந்தும் அசைந்தும்
நெருங்கி நடிக்கும் நிழல்நிற நடிகைக்குத்

திருச்சித் தோழர்கள் 'திரைக்கலா ராணி'
என்னுமோர் பட்டம் ஈந்தனர். இதுபோல்,
திரைப்பட தேவியின் தேர்தல் கணவர்க்கும்
பட்டங் கொடுத்தால் என்ன?
நட்டமா வந்திடும் சொல்லுங்கள் நண்பரே!

வைஜயந்தி கேட்ட வரம்!

மருத்துவர் பாலியை மணந்து கொண்ட
மைசூர் மதுரமாம் வைஜயந்தி மாலா
என்னும் நடிகையும்; இன்பம் வேண்டி
நெருங்குதற் குரிய நியாயக் கணவரும்;

மாலை மாற்றிய மறுநாள் காலை
திருப்பதி சென்றனர், சென்றவர் ஆங்கே
ஓங்கிய மலையில்வாழ் உண்டியல் தெய்வமாம்
வேங்கடா சலபதி காலில் வீழ்ந்து
வணங்கி எழுந்து வாய்மலர் திறந்து,

"காக்கும் தெய்வமே! கருணைக் கடலே!
இளமை ததும்பும் எங்கட்கு விரைவிலோர்
அழகான குழந்தையை அருளுக" என்று
வேண்டிக் கொண்டு வீடு திரும்பினரே!

சூல்கொண்ட சுந்தரி!

கடுங்கண் வீரரின் கைத்துணை யாகிய
ஆயுதப் பெயரே பெயராய் அமைந்த – வேல்
ஆயுதக் கணவரின் அடையாள மனைவியாம்
சூல்கொண்ட சுந்தரி; துணிமேடு நடிகையாம்
கிளிமொழி பேசும் கே. ஆர். விஜயா
விரைவில் தாயாகி விடுவார்! அதன்பின்

படகு நடிகைமேல் பால்மணம் வீசும்!
பாய்மனம் கொண்ட பலாச்சுளை நடிகை
நடித்து முடித்துள நல்ல படமாம்
பால்மனம் வேண்டுமா? பால்மணம் வேண்டுமா?
இரண்டிலே முதலில் எதுவேண்டும் இளைஞரே?

வானவில் அழகி

திருமணம் நடைபெற்ற தேதிக்கு முன்தினம்
வானவில் அழகி வைஜயந்தி மாலா,
கவனக் குறைவினால் காய மடைந்தார்!

உறவுக் கணவரின் ஓவிய நடிகை
கோடை வெப்பம் கொதித்திடும் ஏப்ரல்
இரண்டாந் தேதி இரண்டாம் தடவையாய்க்
காரொன்று மோதிடக் காய மடைந்தார்!

கண்வேல் கொண்டு காயம் செய்திடும்
அந்த நடிகையின் அழகுடல் மீது
பட்ட காயம் பழகும் கரங்கள்
பட்டால் ஆறுமோ? படாதி பதிகள்
பார்க்கும் பார்வையால் பளிச்சென்று மறையுமோ?
தெரியவில்லை. திரைப்படத் தொழிலில்
உண்டாகும் காயம் உடனே மாறுமோ?

எங்கே

இருபத்தைந்தாயிரம்?

காம்பில் லாத கறுப்புத் தாமரை
நடிகையாம்! சேர்ந்து நனையும் பதுமையாம்!
சரோஜா தேவி, "சர்வகலா சாலையின்
வளர்ச்சிக் காக வாரி வழங்குவேன்
இருபத்தை யாயிரம்" என்று கூறினார்

இதுவரை அவரிடம் இருந்தொரு காசும்
வந்தபா டில்லை! வருமோ? வராதோ?
ஆறிய கஞ்சிபோல் ஆகுமோ? நடிகை
கூறிய வார்த்தை குப்பைமே டேறுமோ?

மேடை குறைந்தாலும்

ஆடை குறைந்தாலும்

அவுரங்க சீப்பின் அருமைப் புதல்வி
நிலாமதி சைபுன் நிஸ்ஸா என்பவள்
விரும்பி உடுத்தது வெண்ணிற ஆடையாம்!

வெண்ணிற ஆடை என்னும் படத்தில்
நடித்துப் புகழ்பெற்ற நடிகை நிர்மலா
அன்றாடம் உடுத்தும் ஆடையோ பலநிறம்!

அவருடல் ஒரு நிறம்! அவர்விழி ஒருநிறம்!
தூங்கும் கனிகளின் சுமைகொண்ட நடிகை
வாங்கும் செருப்போ வானவில் லின்நிறம்!

விழிவாசல் நடிகையாய் விளங்கும் நிர்மலா–
தையற் காரரின் தயவினால் உயரும்
மேடை குறைந்தால் வியாபாரம் வீழும்

ஆடை குறைந்தால் அடிக்கும் யோகம்!
என்றுரைக் கின்றார் இதனை
நன்றெனக் கொண்டால் நாடு கெடுமே!

சிரித்தமுகம்

அலைகொண்ட நீரினை ஆறுகள் விரிக்கும்!
மணிகொண்ட தோகையை மாமயில் விரிக்கும்!
வளர்தென்றல் பூக்களின் வாடையை விரிக்கும்!

அவற்றை எல்லாம் அறிந்தோ என்னவோ
விசித்திர நடிகை விஜய நிர்மலா,
பார்த்தோர் மயங்கிடப் பாவாடை விரிக்கிறார்
'சிரித்த முகமெனும்' திரைப்படம் தன்னிலே!

இரண்டு நான்கானால்?

குச்சுப் பிடிநடிகை! குங்குமக் கிண்ணம்
இராஜ சுலோசனா, இரட்டைக் குழந்தைகள்
பெற்றது போலே விஜயாவும் பெறுவார்
என்றுரைக் கின்றார் இளைஞர் ஒருவர்!
நன்கு பெறட்டுமே! நான்குதான் பெறட்டுமே!

அபிநய சரஸ்வதிக்கு அங்கம் தடிக்கிறது!

வேலி நடிகையாய் இருந்து, விதிமுறைத்
தாலி நடிகையாய் மாறிய தையலாம்
தழும்பு நிலவாம்! சரோஜா தேவி,

கட்டில் கணவரைத் தொட்டும் தூங்கியும்
இன்றுவரை தாயாக வில்லை எனினும்,
உள்ளக் களிப்பினால், உணவின் செழிப்பினால்,
இப்போது கொஞ்சம் உப்பி இருக்கிறார்!

அபிநய சரஸ்வதி யாகிய நடிகையின்
உடல்தடித் தென்ன? ஓங்குபுகழ் அல்லவா
தடிக்க வேண்டும் தமிழ்ப்பட உலகிலே!

அவர் பனிக்கடலைப் பார்க்கிறார்!

நான் படாதிபதிகளைப் பார்க்கிறேன்!

அவசர நடிகை 'அலேக்' நிர்மலா,
நடிகை யாகுமுன் நாயகி யாகி,
நாயகி யானபின் நல்லதா யாகித்
தாலாட்டுப் பாடிய தைய லாவார்!

அவர்க்கோர் மைந்தன்; அவன்பெயர் நன்னு.
நன்னு படிக்கிறான். நடிகையின் கணவரோ
கப்பற் படையில் காலங் கழிக்கிறார்.

உப்புக் கடலில் ஒருமூன்று மாதமும்,
ஓட்டு வீட்டிலே ஒருமூன்று மாதமும்;
காலத்தைக் கழிக்கும் கணவரால் ஏதும்
இடையூறு வருவதே இல்லை என்கிறார்
அடையாளத் தாமரை அழகிநம் மிடத்திலே!

பின்னழகைக் காட்டாதே!

முன்புறந் தன்னில் முழுநிலா முகமும்,
கண்ணாடிக் கன்னமும், கரும்புத் தோள்களும்
வம்பு வழியெனும் அன்பும், சொம்பும்,
பெண்ணுக் கிருப்பதை மண்ணுல கறியும்!

ஆடவர் பெண்டிர்மேல் ஆசை வைத்திட
உதவும் உறுப்புகள் எங்கே உள்ளன?
முன்பக் கத்திலா? பின்பக் கத்திலா?
இன்ப வாசலாம் முன்புறம் இருக்கையில்

நடிகையர் பின்புறம் காட்டி நடிப்பதும்,
பெரிய நடிகையின் பின்புற அழகினைச்
சித்திரக் காரர்கள் தீட்டிக் கொடுப்பதும்,
தீட்டிய படத்தைத் தெருவில் வைப்பதும்,
இந்த நாட்டுக் கேற்றதா? அல்லவே!

பிறந்தது பெண்!

சுரந்தது பால்!

ஆடை பாதியும் அழகு பாதியும்
காட்டக் கூடிய கவர்ச்சி நடிகை
கே. ஆர். விஜயா தாயார் விஜயா
எப்போ தாவார் என்று பலரும்
எதிர்பார்த்துக் கொண்டே இருந்தனர் அல்லவா?
செவ்வாய் நடிகைக்குச் செவ்வாய் இரவு
பெண்குழந்தை ஒன்று பிறந்தது பிறைபோல்!

கோடை இரவில் பிறந்தபெண் குழந்தை,
தாயின் மடியிலும், தந்தையின் தோளிலும்,
பருவம் மாறிய பாட்டியின் கையிலும்,

சலவைக்கல் வீட்டிலும் தவழ்ந்திடும் இனிமேல்
ஆள்நினைந் தூட்டும் அழகி அதற்குப்
பால்நினைந் தூட்ட வேண்டும் பலமுறை!
அவ்வாறு நடப்பதே அன்னைக் கழகாம்
எவ்வாறு நடக்கிறார் என்றுபார்ப் போமே!

எதனால் வந்த மயக்கம்?

நகைச்சுவைப் பாத்திர நடிகையாம் திருமதி
அங்க முத்துவும் அவரொடு சிலரும்,
கருமை பெற்ற கடலில் வெண்ணிலா
தோன்றும் காட்சியைச் சுவைத்திட வேண்டிப்

பாட்டுப் புலவர்சூழ் கோட்டைப் பட்டினம்
சென்றனர். சென்று சித்திர சமுத்திரக்
கரையில் நின்றபடி கன்னி வெண்ணிலா
நீலக் கடலில் நீராடும் காட்சியை

விழிகளால் அள்ளி விழுங்கிக் கொண்டி ருக்கையில்
அங்கம் தடித்த அங்க முத்தெனும்
மாட்டுவண்டி நடிகைக்கு மயக்கம் வந்ததாம்.
வாராத மயக்கம் வந்ததால், நடிகை

உப்புக் கடலில் தொப்பென்று வீழ்ந்திட,
அருகில் இருந்தோர் அவரைக் காப்பாற்றி
கட்டு மரம்போல் கரையில் சேர்த்தனர்.
தடித்த நடிகையைத் தண்ணீரில் தள்ளிய

அந்த மயக்கம் அழகின் மயக்கமா?
ஏதேனும் குடித்ததால் ஏற்பட்ட மயக்கமா?
என்பதை அறியோம்! எனினும் அந்தத்
தென்கட லேனும் தெரிந்தால் சொல்லுமோ?

இரண்டு குடங்களும் நூறு படங்களும்!

இறுக்கி இறுக்கி எட்டுமுடி போட்டுப்
பட்டய சாசனப் பகுதியைக் காட்டும்
நங்கூர நடிகையாம் நளின சரோஜா
தேவி நடித்துள்ள திரைப் படங்களோ
சதகம் போன்று சரியாக நூறாம்!

நூதன நடிகை நூறு படங்களில்
நடித்து முடித்து நல்வெற்றி பெற்றதைக்
கொண்டாடு தற்கோர் குழுவமைத் துள்ளனர்!
தேவி கமிட்டிக்குத் தேவராஜ் அர்சூ
மைசூர் தொழில்நல மந்திரி யாவார்!

எண்ணற்ற வேலைகள் இருக்கையில் இவர்க்கேன்
தையல் விழாவில் தலைமைப் பதவி?
என்று கேட்டிட எவரும் ஆங்கே
இல்லை போலும்! இருந்தால்
அல்லவா தெரியும் அமைச்சர் அவர்களே!

மேலே முகம்! கீழே சுகம்!

மேலே தெரிந்தால் விபரீதம் விளையும்!
கீழே தெரிந்தால் கிளர்ச்சி நடக்கும்!
அனைத்தையும் மறைத்தால் ஆசைகள் உறங்கும்
என்பதால் இந்த இளநிலா மங்கை

'ஆற்றிலே பாதி சேற்றிலே பாதி'
என்பதற் கேற்ப இவ்வா ருடுத்துளார்
என்றெண்ணு கின்றோம்! இதனைத்
தென்மணல் நாடு 'சீசீ' என்னுமே.

பெரிய நடிகையின் பிறந்த நட்சத்திரம்!

எட்டு நாள் ஆன இளம்பிறை, கடலினைத்
தொட்டுக்கொண் டிருக்கும் தோற்றம் போல
நெற்றியும், இருண்ட நிறம்பெற்ற கூந்தலும்,

தேர்வு நடத்தும் பார்வையும், நன்கு
கொழுத்துப் பழுத்த கோவை இதழ்களும்,
புறப்பொருள் மேடும், அகப்பொருள் ஆழமும்
அமைந்த அழகியாம்! அன்னப் பறவையாம்!

கிளர்ச்சி நடிகை கே. ஆர். விஜயா
கதம்பக் காவடி! கற்கண்டு மண்டபம்!
என்றால் இவற்றை இப்போதும் ஒப்பலாம்!

வேரூன்றி வளர்ந்து தாறீன்ற வாழையாம்
பெரிய நடிகையின் பிறந்தநட் சத்திரம்
திருவோணம் என்பதைத் தெரிந்துகொள் வீரே!

விளக்கெண்ணெய்

விளக்கம் !

எள்ளில் இருந்துநாம் எடுப்பதே எண்ணெய்,
எள்+நெய் என்பதே எண்ணெயா யிற்றாம்
என்பதை அறியார் எண்ணையென் றெழுதுவர்.

நல்லெண்ணெய் உடலுக்கு நல்லதாம் என்பார்,
புன்னையின் எண்ணெய் புண்களை ஆற்றுமாம்.
தேங்காய் எண்ணெயால் தீங்குபல நீங்குமாம்.

கூழையாய் இருக்கும் கூந்தல் வளர்ந்திட
வேண்டுமே யாயின் விளக்கெண்ணெய் தேய்த்தே
தையல் மாதர் தலைமுழுக வேண்டுமாம் !

இவ்வாறு சொன்னதார் என்பது தெரியுமா?
தழும்பு நிலவாம் சரோஜா தேவிதான்.
இரண்டாண்டு கட்குமுன் இவ்வாறு கூறினார்.

வெண்ணெய் விளக்கத்தை வேறுசிலர் தரலாம்,
எண்ணெய் விளக்கத்தை இப்படிப்பட்ட
நடிகையால் தானே நன்குதர முடியும்!
விளக்கெண்ணெய் சரோஜா தேவியின் விளக்கம்
சரியா தவறா என்று
தெரிந்திட வேண்டின் தேய்த்துப்பார்க் கட்டுமே!

எல். ஆர். ஈஸ்வரியும்

எலந்தப் பயமும்!

எலந்தப் பயமெனும் இனிய பாடலைப்
பாமரச் சுவையொடு பாடிய பாடகி
எல். ஆர். ஈஸ்வரி, இதுநாள் வரையில்
இலந்தைப் பழத்தைத் தின்றதே இல்லையாம்!
மதுரசக் கனியெலாம் மரத்தின் கொப்புளம்
என்பதால் திருமதி எல். ஆர். ஈஸ்வரி
தோலுடல் இலந்தையைச் சுவைபார்க்க வில்லையோ?
ஆப்பிள் கனிக்கீ டாகுமோ இலந்தை
என்பதால் தின்னுதற் கெண்ண வில்லையோ?
ஏதும் நமக்குத் தெரிந்தபா டில்லையே!

பிஞ்சுக் குழந்தையின் பெயர்

வேலா யுதத்தின் விளம்பர மனைவி
கிளர்ச்சி நடிகையாம் கே. ஆர். விஜயா
குழிக்கிழங் கென்னும் குழந்தையை ஈன்ற
நல்ல செய்தியை நாடே அறியும்.

முப்பது தினங்கட்கு முன்ன தாக
மருத்துவ மனையில் மலர்ந்த குழந்தைக்கு
என்னபெய ரிடலாம் என்று யோசித்து,
மீசைக் கணவரும் ஆசை நடிகையும்
இரவல் மொழியிலே 'ஏமலதா' என்று,
பயிரிட்ட நாற்றுக்குப் பெயரிட் டுள்ளனர்.

பிஞ்சுக் குழந்தைக்குப் பெயர்சூட்டு நல்விழா
விரைவில்நடை பெறுமாம். விழாநடை பெற்றதும்,
குடமும் படமும் கொண்ட நடிகை
பாடல் பெற்ற பழனிக்குச் சென்று
சாமி தரிசனம் செய்திடு வாராம்!
மாமி தரிசனம் இருக்கையில்
சாமி தரிசனம் தேவை இல்லையே?

காகம் பாடப் போகிறதாம்

படிக்காசுப் புலவரால் பாராட்டப் பெற்ற
முஸ்லீம் குமணனாம் முத்தமிழ்ச் சுவைஞனாம்
வான்புகழ் சீதக் காதி வள்ளலின்
அரண்மனை நாட்டியக் காரி யாகிய
கணிகை மாணிக் காத்தாள் என்பவள்
ஆடற் கலையிலும் அழகிலும் சிறந்தவள்!

கற்றவர் வியக்கும் காவடிச் சிந்துக்கு
நல்லிசை வகுத்த நளினப் பரத்தை
இளவேனிற் குயில்போல் இசைபாட வல்லவள்!

கோவலன் தழுவிய குருக்கத்தி மாதவி,
ஆடலில் பாடலில் அழகில் சிறந்தவள்
என்பது செந்தமிழ் இலக்கியச் செய்தியாம்!

உறுப்பி லக்கணச் சிறப்பெலாம் பொருந்திய
அழகும் அத்துடன் ஆடலும் பாடலும்
வஞ்சி ஒருத்திக்கே வாய்ப்ப தரிதாம்!

அரிதே ஆயினும் ஆடல் பாடல்
அழகிம் மூன்றிலும் அன்றைய நடிகையர்
திரைப்பட உலகில் சிறந்து விளங்கினர்,

என் இளமைக்குக் காரணம்?

கண்மீன் வளர்க்கும் விண்மீன் நடிகையாம்
வெள்ளித் தோணியாம் விஜய நிர்மலா
திருமண மான தேன்மங்கை என்பதும்;
குழந்தைபெற் றெடுத்த கோதை என்பதும்;

ஆணிப்பொன் மேனி அழகின் கவர்ச்சியால்
ஏணிப் புகழ்பெற் றிருப்பவர் என்பதும்
நம்மவர்க் கெல்லாம் நன்கு தெரிந்ததே!
"தூண்டும் பருவச் சுவையில் வீழ்ந்துபல்

ஆண்டுகள் இத்தனை ஆகியும் கூட
இன்னும் இளமையோ டிருக்கின் றீர்களே?
இதற்கென்ன் காரணம் என்றொரு நிருபர்

கேட்டிட அதற்குக் கிளிமொழி நடிகை,
"ஆண்டவன் அளித்த அருட்பிர சாதமே
இதற்கெலாம் காரணம்" என்றுரைத் தாராம்!

இளமை கெடாமல் இருப்பதற் கெல்லாம்
காரணம் அந்தக் கடவுளே என்றால்,
எச்சில் நடத்தையால் இளமையும் எழிலும்
மதிப்புக் குரிய வாழ்வும் பாழ்படின்
அதற்குக் காரணம் ஆண்டவன் அல்லவே?

நடிகையே!

நகத்தைக் கடிக்காதே!

மண்வெறி கொண்ட மாவீரன் சீசர்
எல்லா நாட்டையும் வெல்ல நினைத்தான்!
அவனைப் போலவே அலெக்சாண்டர் நினைத்தான்!

நெருப்பென விளங்கிய நெப்போ லியனும்
கால மறிந்து கனைத்தான். இந்த
ஞாலத்தைக் கண்ணீர் நதியாக்க நினைத்தான்!

புண்வீரம் காட்டிய மண்வீரன் சீசர்
வலக்கரம் எப்போதும் வாளைத் தடவுமாம்.
ஆணிவேர் வீரன் அலெக்சாண்டர் கரங்கள்
வென்றோன் தோள்களை விரைந்து தழுவுமாம்.

அழுக்கு நடத்தை அழகியின் கணவனாம்
வழுக்கை நெப்போலியன் வலக்கரம், கொம்பில்
படரும் கொடிகளைப் பற்றி இழுக்குமாம்.

அஞ்சா நெஞ்சனாம் அவனோ அடிக்கடி
கைவிரல் நகத்தைக் கடிப்பது வழக்கமாம்!

பக்குவமான பருவசிங் காரமும்,
காவடிப் புருவமும், கண்ணாடிக் கன்னமும்,
இடம் பெயராத இளநீர்க் குடங்களும்
காட்டி மயக்கும் கவர்ச்சிக் கன்னியாம்

கூந்தல் மயிலாம் குமரிரமா பிரபா
என்னும் நடிகையும் இவ்விதம் அடிக்கடி
கைவிரல் நகங்களைக் கடிப்பதுண் டென்பதை
அவரைச் சந்தித்தோர் அனைவரும் அறிவர்!

'அணில்வரிக் கொடுங்காய்' ஆகிய வெள்ளரிக்
காய்கள் இருக்கையில், கனிகள் இருக்கையில்,
கரும்பும் பேரிக் காயும் இருக்கையில்.
கைவிரல் நகத்தைக் கடிப்பது நல்லதா?

ராத்திரிக் குதவும் பூத்திரி நடிகை
மூடிவைத் துள்ள முழுத்தேங் காயைக்
குத்தகை யாளர்க்குக் கொடுத்துத்
தித்திக்கும் காய்களைத் தினங்கடிக்க லாமே!

கதாநாயகியின் கருப்பை!

அமெரிக்க நாட்டின் அழகு நடிகையாம்
இளமை ததும்பும் எலிசபெத் டெயிலர்,
பழகவும், இதழ்களைப் பழுக்க வைக்கவும்,
விலகவும், சிலரை விலக்கவும் வல்லவர்!
பலர்கை மாறும் பணத்தைப் போன்றவர்!

பனிக்கட்டி உடம்பில் தனிக்கட்டி காட்டியும்
'நெருங்கிவா' என்று நீரோடை காட்டியும்
இளைஞரைப் பருவத் தூண்டிலால் இழுக்கும்
ஆற்றல் வாய்ந்த அழகியின் கருப்பை
அண்மையில் ஒருநாள் அகற்றப் பட்டதாம்!

ஆகவே, இனிமேல் அந்த நடிகை,
கொஞ்சலாம், கொஞ்சிக் கூடலாம் அன்றிப்
பிஞ்சுக் குழந்தை பெற முடியாது!

"டாம்பீக மான டாலர் நடிகையின்
காதல் சரித்திரம் கரையா திருந்தால்
அதுவே போதும் அல்லவா?" என்று
புதிய கணவர் புகலுவ தாகக்
கேள்விப் படுகிறோம்! காதல்
வேள்வி நடத்தினால் போதுமே வீட்டிலே!

❀

மாதிரிக் கணவரும்

மோதிர நடிகையும்!

வசதி இருந்தால் வானத்தின் வழியாய்
ஆறு மணிக்குள் அமெரிக்கா போகலாம்!
தண்ணீரில் குளித்தவன் பன்னீரில் குளிக்கலாம்!
செத்தையில் படுத்தவன் மெத்தையில் படுக்கலாம்!

குணத்தால், கொள்கையால் கூடாத தாயினும்:
பணத்தால், அந்தப் பணத்தின் வலிமையால்,
இந்த உலகத்தில் எதையுமே பெறலாம்!

சுடாத நிலவில் தூங்காத அல்லியாம்!
படாதி பதிகளின் பழத்தோல் படகாம்!
தொழில்முகம் காட்டித் தொகைப்பணம் சேர்க்கும்
எழில்முக நடிகையாம் இருட்டறை தேவிகா

சுற்றுப் பயணத்தைச் சுவைப்பயண மாக்கவும்.
தக்க நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கவும்
மலாயா செல்கிறார். மற்றும் அவரொடு
கட்டில் வேடிக்கைக் கணவரும் செல்கிறார்!

மாதிரிக் கணவரும் மோதிர நடிகையும்
ஒருதிங்கள் அங்கே உலவு வார்களாம்!

பட்டகைப் படாமல் வேறுகைப் பட்டதாய்த்
தொட்டவர் தொடாமல் வேறொருவர் தொட்டதாய்ச்
சென்னை நகருக்குச் செய்தி வராதென
நம்பு கின்றோம்! நடிகையின்
அம்பு விழிகள் அடங்க வேண்டுமே!

உணர்ச்சி நடிகையின்

உதட்டுக்கு யோகம்!

கண்ணீர் நடிப்பாம் வெந்நீர் நடிப்பிலும்
கட்டில் நடிப்பாம் காதல் நடிப்பிலும்
கைதேர்ந்த நடிகை காஞ்சனா என்பதை
இந்தியை எதிர்க்கும் இந்தநா டறியும்

தாம்புக் கூந்தலும் தனிப்பிறை நெற்றியும்;
காம்பு கெடாத காய்களும் கனிகளும்;
வசீகரத் தோற்றமும் வாடகைப் பார்வையும்
அமைந்த நடிகையாம் அந்த நடிகை,

அரைப்படங் காட்டி ஆசைத்தேர் ஓட்டும்
திரைப்பட உலகின் தேவி யாகுமுன்:
விமானத் துறையில் வேலைபார்த் தாராம்!

ஓங்கிய கல்வியால் உத்தியோ கத்தையும்
உயர்ந்த நடிப்பினால் உதட்டு யோகத்தையும்
கண்ணழகி காஞ்சனா பெற்றதைக் கண்டோம்
அழகி ஒருத்தி நெருங்கிப்
பழகினால் படத்துறை பாதத்தைத் தாங்குமே.

சம்பள ஜானகி

சரித்திரத் தலைவியாம் சந்தனச் சீதையோ
தசரத ராமனின் சர்க்கார் ஜானகி

கிருஷ்ண குமாரியின் அக்கா ளாகிய
சௌகார் ஜானகி சாயம் பூசிய
உதடுகள் காட்டி உலவும் ஜானகி!

சம்பளம் வாங்கும் சௌகார் ஜானகி
எப்போது பிறந்தார் என்றொருவர் கேட்கிறார்.

முத்தமிழ் நாட்டில் முதன்முத லாக
வெள்ளித் திரைப்படம் வெளிவந்த ஆண்டே
அந்த நடிகை பிறந்ததாய் அறிகிறோம்.

ஆண்டுகள் முப்பத்தே மூகிய நடிகையின்
அடையாளச் சிரிப்பின் அழகில் மயக்கம்
அடையாதார் உண்டோ சொல்லுவீர் அன்பரே!

நக்கீரனுக்கும் மன்றம்

நடிகைக்கும் மன்றமா?

குன்றம் என்பது கருங்கல் கூரையாம்!
மன்றம் என்பது மதிவாணர் கூடமாம்!

கருங்கல் குன்றம் உயரத்தைக் காட்டும்,
கலைவளர் குன்றம் கல்வியை ஊட்டும்.

வீதிக்கு வீதி மன்றங்கள் வேண்டும்
நீண்ட பெரும்புகழ் நீட்டி வளர்த்தோர்
பெயரால் மன்றங்கள் பெருகுதல் வேண்டும்!

இன்றைய நிலைமை எப்படி என்றால்
சதைக்கதவு திறக்கும் சரச நடிகையர்
பெயராலும் மன்றங்கள் பெருகிவரு கின்றன!

விழுதுக் கூந்தலும்; வெண்பிறை நெற்றியும்;
கருங்கடல் போன்ற கண்களும் அடிக்கடி
ஒத்தாசை செய்யும் உதடும்; கன்னமும்;

முத்தான பற்களும்; மோகனக் குறிப்பும்
காட்டக் கூடிய கவர்ச்சி நடிகையாம்
வேல்விழி— கே.ஆர். விஜயாவின் பெயரால்
மதுரைமா நகரிலோர் மன்றம் உள்ளதாம்!

யாருக்கு மன்றம்? நடிகைக்கு மன்றம்!
எங்கே மன்றம்? எழில்நகர் மதுரையில்!

நக்கீரர் பிறந்த நற்றமிழ் மதுரையில்
நழுவும் பாத்திர நடிகைக்கு மன்றமா?

வண்டுகள் இருக்கையில் ஈக்களை மதிப்பதும்;
சந்தனம் இருக்கையில் சகதியை மதிப்பதும்
சிந்தை தெளிந்தோர் செய்கை யல்லவே!

கைமாறிய கனி

ஆந்திரக் கதம்பம் அலேக் நிர்மலா
நேரமும் நிலைமையும் அறிந்து, நிதானமாய்
ஆரம்பக் கணவரின் அணைப்பையும் இணைப்பையும்
விட்டுப் பிரிந்து வேறொரு நடிகரை
மார்ச்சு மாதம் மணஞ்செய்து கொண்டார்!

தாலி மனைவி, தாயான பின்னர்
மற்றோர் இளைஞரை மணப்ப தென்பது,
கற்பு நெறிக்குக் களங்கமாம்; என்பதை
அமெரிக்க ஜாக்லினும் அலேக் நடிகையும்
ஏற்றுக் கொள்வதாய் இருந்தால், இவ்வாறு
மற்றொரு கைக்கு மாறு வார்களா?

முதற் கணவரோடு மூவிரண் டாறு
வருடங்கள் இல்லற வாழ்வு நடாத்திக்
குழிக்கிழங் கென்னும் குழந்தைான் றெடுத்த
தொங்கட்டான் நடிகையின் புதிய தொடர்பு
போகப் போகப் புளிக்குமா? இனிக்குமா?
தின்றது வாந்திபோல் திரும்புமா? என்பதை
இப்போ தறியோம்! ஒருசிலர்
தப்பும் தவறும் சட்டென்று புரியுமோ?

பத்மினி!

செண்பக மலரெனச் சிவந்த மேனியாள்
பண்படு சொல்லினாள் பகரில் பொய்சொலாள்
விண்படர் நறுமணம் வீசு மெய்யினாள்
கண்படாக் கானமான் அனைய காட்சியாள்

பூவென மென்மயிர் குழைந்த பொற்பினாள்
கூவிளம் பழமிரண் டனைய கொங்கையாள்
தூவிதழ்ப் பங்கய வாசந் தோன்றிட
ஒவரு சுரதநீர் உலவும் வாசத்தாள்.

உற்பலம் போலவும் ஒளிரு மேனியாள்
பொற்புறு குரவரைப் புனித வேந்தரைப்
பற்பல தேவரைப் பணிந்து போற்றுவாள்
எற்படு தாமரை இதழின் அல்குலாள்.

எள்ளிளம் பூவென விளங்கு நாசியாள்
பிள்ளைவெள் ளனமென நடக்கும் பெற்றியாள்
வெள்ளைவென் தூசுவெண் போது வேண்டுவாள்
ஒள்ளிய தீஞ்சுவை அற்ப உண்டியாள்.

நாணமும் மானமும் நயந்த சிந்தையாள்
பூணணி உடலநோந் துலவு பொற்பினாள்
காண்வரு செவ்வரி கலந்த கண்ணினாள்
அவளே நங்கை பத்மினி!

அந்த நங்கை பத்மினி இப்படி!
இந்த நடிகை பத்மினி எப்படி?

பாத்திரம் அறிந்து பிச்சையிடு!

சாத்திரப் பொய்யரின் தாமரை லட்சுமி
பாடும் புலவர்க்குப் பணைந்தரா லட்சுமி
கோத்திரம் பார்க்கும் குலமகள் லட்சுமி
கொம்பு மஞ்சள் குளிக்கும் லட்சுமி!

லேடி லட்சுமி 'லிப்ஸ்டிக்' லட்சுமி!
மாடி லட்சுமி 'மரத்தோணி' லட்சுமி!

பாதி உடம்பைப் பளிச்செனக் காட்டும்
வீதி லட்சுமி 'விலாசம் கேட்பவள்!
பாகவத ரோடு படத்தில் நடித்த
லட்சுமி, எம். ஆர். சந்தான லட்சுமி!

திருமதி டி. பி. ராஜ லட்சுமி
அந்தநாள் நடிகரின் ஆசை லட்சுமி!
சோதி லட்சுமி இந்தநாள் சுடர்க்கொடி
நாலும் தெரிந்த நடிகை; சந்தனப்
புள்ளிப் புடவை உடுத்தும் புதுமயில்!

தோடுடை செவிகளும்; துணைமீன் விழிகளும்;
ஏடுடை நறுமலர் ஏறிய கூந்தலும்;
உரையாடல் உதடும்; ஒளியாடு மேனியும்;
கூர்கொண்ட மலையும்; குளிர்கொண்ட சுனையும்;

நிமிரா இளம்பிறை நெற்றியும்; அன்றைய
அமரா வதிபோல் அழகும் அமைந்த
சோதி லட்சுமியின் தோட்டம் தன்னில்
பூநாகப் பாம்புப் புற்றொன் றுள்ளதாம்!

எழுத்தின் மீதுநாம் இடுகின்ற புள்ளியே
ஒற்றாம்! கறையான் உண்டாக்கும் இல்லமே
புற்றாம்! பாம்புகள் புகுந்துபடுத் துறங்கும்
புற்றுக்கள் எல்லாம் பூமியின் செவிகளாம்!

மூச்சை வீணாக்கா முனிவர்போல், தமது
மூச்சை வீணாக்கா மோதிரப் பாம்புகள்
வாழும் புற்றுக்கு வருடத்திற் கொருமுறை,
தோதுபோல் நடக்கும் சோதி லட்சுமி
சிறப்பொடு பூசனை செய்கின் றாராம்!

பசுப்பால் வார்த்துப் படைக்கின் றாராம்!
ஊர்ந்து செல்லும் ஊமைப் பாம்புக்குப்
பசுப்பால் வார்த்துப் படைப்ப தென்பது,
கற்கால நிகழ்ச்சியாம்! கடற்கரைத் தாழையின்

முள்போலும் பற்கள் முளைத்த பாம்புக்கு
வார்த்திடும் பாலை, வறுமையால் வாடும்
கூரை வீட்டுக் குழந்தைக்குக் கொடுத்தால்
அதன்பசி நீங்கும்! ஆரோக்யம் ஓங்கும்!

ஆதலால் இனிமே லாயினும், பழைய
மூடக் கொள்கையை முளையிலே கிள்ளி
எறிவா ராக! இளந்தென்றல் நடிகை
பசித்தோர் முகத்தைப் பார்ப்பா ராக!

பாத்திர மறிந்து படைப்பதே அறநெறிச்
சாத்திர மாகும் தமிழ்நிலா நடிகையே!

மறைப்பதே மரியாதை!

படாதி பதிகளை விடாது பார்க்கும்
பொருளா தாரப் போட்டிப் பார்வையும்;
பக்குவம் கெடாத பருவமும் கொண்டவர்
விநோத நடிகையாம் விஜய லலிதா!

வெள்ளிக் குடமாம் விஜய லலிதாவைப்
பாராட்டு கின்றோம்! பாராட்டக் காரணம்
ஏதேனும் உண்டோ என்று கேட்பின்;
உண்டென்று சொல்லுவேன். ஒருசில நடிகையர்,

ஆடையைக் குறைத்தால் அழகு சிறக்கும்
என்று கூறும் இந்த நாளையில்,
இரவுப் பறவையாம் இந்த நடிகை,
மேட்டையும் கூட்டையும் மெல்லிய புடவையால்

மறைப்பதே நடிகைக்கு மறியாதை என்பதை
புடவை உடுத்திப் புலப்படுத்து கின்றார்!
ஆதலால், சிறந்த அழகுப் பதுமையைச்
சீராக வளர்த்துள சினிமா நடிகையைப்
பாராட்டு கின்றோம் பச்சைத் தமிழிலே!

கட்டில் இயக்கம்

ஆனியில் மணமாம்; அந்த மாதமே
கட்டில் மனைவிக்குக் கனத்ததாம் வயிறு!

மாதம்பத் தானதும் மகவைஈன் றாளாம்
என்பதை இன்றுநாம் ஏற்பதற் கில்லை!

மணமாலை இட்ட மங்கை ஒருத்தி
ஆண்டுமூன் றாகுமுன் அன்னை யாகித்
தொட்டிலை ஆட்டுதல் தொல்லைக்கு வித்தாம்!

கால மறிந்த கருவாசல் அடைத்தால்
நிலநீர் உலகின் நெருக்கடி தீரும்!

அதிவீர ராமனின் அண்ணனாம், அந்த
வரதுங்க ராமனின் மங்கல மனைவி
நெடுங்கால மாக நிலாமுளை போலொரு
குழந்தை இன்றிக் குமுறிக் கொண் டிருந்தாள்,
அரண்மனைப் பாண்டியன் மனைவியின் ஆசை
பத்தாண்டு கட்குப் பின்னர் பலித்ததாம்!

பெரும்பெயர் பெற்ற பின்னணிப் பாடகி
திருமதி சுசீலா, திருமண மாகி
ஆண்டுகள் இத்தனை ஆகியும், அன்னையாய்
இதுவரை ஆனதே இல்லை! எனினும்
இப்போது கருவுற் றிருக்கின் றாரம்!

குளவி கட்டிடும் கூடுபோல் வயிறு
போகப் போகப் பூரித்து வீங்கிப்
பத்து முடிந்தால் முத்தொன்று வழங்கும்!

கட்டில் இயக்கமே கருப்பமாம்; மற்றதன்
தொட்டில் இயக்கமே சொந்தக் குழந்தையாம்
என்பதை எண்ணும் பொழுதனில்
அன்னையின் நெஞ்சில் அன்பு சுரக்குமே

விலை காப்பு

ஆற்றுநீர் ஊற்றுநீர் வேற்றுநீர் ஆகிய
மூன்றும் கலந்ததே முந்நீர் ஆகும்.

முழங்கும் கடலினை முந்நீர் என்றுநாம்
எழுதுதற் கெல்லாம் இதுவே காரணம்

அகிலத்தின் வேலியாகி கிழக்கடல்
நீருண்டு கறுத்த நிறங்கொண்ட முகிலைக்
கொண்மூ என்று கூறுவர் புலவர்!

கொண்டவன் உறவினால் கோதை ஒருத்தி
தாயாகக்கூடிய சந்தர்ப்பம் எதுவோ
அதுவே புதுச்சுமை! அச்சுமை தாங்கும்
அவளோர் கொண்மூ! ஆயினும் அவளோ
மண்ணிலே உலவும் மங்கல மேகம்!

பத்தாண்டு கட்குமுன் பல்லோர் அறியச்
சிறந்த நடிகை ஜெயந்திக்கும், பெக்கட்டி
சிவரா வுக்கும் திருமணம் நடந்ததாம்!

ஆண்டுகள் இத்தனை தாண்டிய பின்னர்க்
கவர்ச்சி நடிகை கருவுற் றிருக்கிறார்.

பெக்கட்டி ராவின் பிரிய நாயகி
இக்கட்டு வந்ததே என்றெண் ணாமல்
'அக்கட்டி' யாகிய அரிய கருவைத்
திக்கெட்டும் தெரியச் செய்த படியால்
வளை காப்பு விழாவும் வந்து சேர்ந்தது!

காளையர் மாதத்தைக் காலண்டர் காட்டும்,
கருவுற்றோர் மாதத்தைக் கனவயிறு காட்டும்
ஆதலால், அந்த அழகு நடிகையின்
இலைவயிறு, மாதம் ஏழென்று காட்டவே,
படாதி பதிகளைப் பார்த்துப் பார்த்து
வளையும் நடிகைக்கு வளைகாப் பிட்டனர்.
குறில்நிலா நெற்றியில் குங்குமம் இடுவதும்
மாதம் ஏழான மங்கையாக் கெல்லாம்
வளைகாப் பிடுவதும் மங்கல வழக்குதான்!
வளைகாப் பெல்லாம் மங்கைஒருத்திக்கு
விலைகாப் பாகும்; மேலோர் கூறும்
கற்பே சிறந்த காப்பாம் என்பதை
இராணி பத்மினி ஏற்றாள், இதனை
இராத்திரி ராணிகள் ஏற்ப தில்லையே!

தையல் ஊற்றும் தண்ணீர்!

மாரியைப் போல பாரி கொடுத்தான்
பாரியைப் போலே, படித்தோர்க் கெல்லாம்
குமண வள்ளலும் கொடுத்தான். அதுபோல்
வடநாட்டு ஹர்ஷனும் வாரி வழங்கினான்.

அவ்வாறு வழங்காத அரசனை மணந்த
அபிநய சரஸ்வதி யாகிய நடிகையாம்,
சந்தனக் கிண்ணம் சரோஜா தேவி

ஒட்டுக் கூந்தல் ஒருபுறம் சரிந்திடச்
செயற்கை மேடுகள் சிறிதே தெரிந்திட
இருகுடம் இருக்கையில் ஒருகுடம் சுமந்து,
வாசலின் ஓரம் வாடி வதங்கி

ஈரம் இறந்துபோய் இருக்கும் செடிகட்கு
நேரம் அறிந்து நீரூற்றி வருகிறார்!

சண்டி மனைவி, சாக்ரட்டீஸ் தலையில்
குடத்து நீரைக் கொட்டி னாளாம்!

சம்சார நடிகை சரோஜா தேவியோ
கொடிகளின் தலையில் நீர்கொட்டி வளர்க்கிறார்!

எண்ணிப் பணத்தை எவருக்கும் தராமல்
கண்ணழகு நடிகை தண்ணீர்ப்
புண்ணியம் செய்வதால் பொருள் நட்டமில்லையே!

மேலாடையால்

மீன் பிடிக்கிறார்

மின்னும் தன்மை உடையது மீனாம்!
விலைபடு மீன்போல் விண்மீனும் மின்னும்
ஆயினும் குளத்துமீன் அகன்று போதல்போல்
அகலுவதில்லை ஆதலின், விண்மீனை
அகலா மீனென அறிஞர் கூறினர்.

கொள்ளிபோல், புள்ளிபோல் வெள்ளிபோல்
விளங்கும்
உச்சிவிண் மீனினால் ஒளியைப் பெறுகிறோம்
வகுத்த விரல்போல், வாள்போல் விளங்கும்
ஓடைநீர் மீன்களால் உணவைப் பெறுகிறோம்.

விண்மீன் பகலில் விழித்திருப்ப தில்லை
ஓடைமீன் என்றுமே உறங்குவ தில்லை
இதற்குக் காரணம் என்ன தெரியுமா?
எந்த மீனுக்கும் இமைகள் இல்லை
எனவே மீனும் உறங்குவ தில்லை!

நாறும் மீனுக்கு நதியே வீடு.
வேறு மீனுக்கு விண்ணே வீடு.

அரிகிருஷ்ணன் எடுத்த அவதார மாகிய
மச்சத்தை தின்னுதல் நிச்சயம் பாவமாம்!

நாரையும் கொக்கும் நாயும் நரிகளும்
பூனையும் வேங்கைப் புலியும் சிங்கமும்
பாவ புண்ணியம் பார்ப்பதே இல்லை!

பறக்கும் கொக்குக்குப் பசியெடுக்கு மாயின்
வெண்கெண்டை மீன்களை விட்டு வைக்குமா?

ஆட்டையும் மாட்டையும் அடித்துத் தின்பவர்,
தீக்குடுமிச் சேவலைத் தின்ன மறுப்பரோ?

சமணமும் பௌத்தமும் சைவசித் தாந்தமும்
கொல்லா நெறியைக் கூறிய போதிலும்
இலைக்கறி இருந்தும் தலைக்கறி தின்கிறோம்.

நாவினால் மீன்பிணம் தூக்கும் நண்பர்கள்
இங்குமட்டுமா? எங்குமே உள்ளனர்!

மகமது துக்ளக் என்னும் மன்னவன்
தேனினும் சிறந்ததாய் மீனைக் கருதினான்.

அளவு மீறிடின் அமுதமும் நஞ்சாம்
என்பதை அறியா இரைப்பை வெறியனாம்
அந்தத் துக்ளக் அரசன் ஒருநாள்,
மீன்கறி தன்னை மிகுதியாய்த் தின்றதால்
திக்குமுக் காடிச் செத்துவிட் டானாம்!

மீன்கள் துள்ள விளையாடும் காட்சி
கண்ணுக் கினிய காட்சி யாகும்.
அந்தக் காட்சியை அடிக்கடி கண்டு
களித்துவந் தாராம் கசடறக் கற்ற
உ.வே. சாவின் உபாத்தியாயர்.

வசீகர நடிகை வாணி ஸ்ரீக்கும்
மீன்காட்சி காண்பதில் மிகவும் விருப்பமாம்!

ஒருநாள் அந்த ஒவிய நடிகை
ஒகேனகல் என்னும் ஊரில் இருக்கையில்
ஒகேனகல் மலையின் ஓரத்தில் ஓடும்

அருவியில் மீனினம் அழகொடு துள்ளும்
காட்சியைக் கண்டு களித்த தோடு
சிரித்துக் கொண்டே சிற்றாடை தன்னை
விரித்து விரித்து மீன்பிடித் தாராம்.

விண்ணை பிடிப்பது விஞ்ஞானமாகும்
வெற்றியைப் பிடிப்பது வினைத்திற னாகும்,
பாதம் பிடிப்பதும் பதவியைப் பிடிப்பதும்
தள்ளி மிதிக்கும் தந்திர மாகும்!

விடுதலை மீன்களை விரும்பிப் பிடிப்பது
பொதுமலர் நடிகைக்கு பொழுது போக்காயினும்
துடிக்கும் மீனுக்குத் துன்பம் நேருமே!

பெயர் சூட்டு விழா!

பிறந்த குழந்தைக்குப் பெயர்சூட்டும் விழாவே
அதற்குநாம் நடத்தும் ஆரம்பத் திருவிழா.
அவ்விழா, பெயர்ச்சொல் அகராதி போன்றது
திரைப்பட உலகில் சிறந்து விளங்கும்
நட்சத்திர மாகிய நடிகை லட்சுமியின்
பெண்குழந் தைக்குப் பெயர்சூட்டும் நல்விழா
நடிகையின் கணவர் இல்லத்தில் நடந்தது.

விருந்தொடு பிறந்த பெயர்சூட்டு விழாவில்,
மின்னும் குழந்தைக்குச் 'சாந்த மீனா'
என்னும் பெயரிட் டின்புற் றார்களாம்!

அன்னையின் அழகை அள்ளிக் கொண்டு
வெளிவந் திருக்கும் விளம்பரக் குழந்தையோ
நடிகையின் குழந்தை! அதற்குநாம் நடிக்கக்
கற்றுக் கொடுக்கவா வேண்டும்? காற்றுக்கு
வீசவும்; செந்நெல் விதைக்கு வளரவும்;
வான வில்லுக்கு வளையவும்; இங்கே
யாரும் கற்றுக் கொடுப்ப தில்லையே!

பவுடர் பூசும் பௌர்ணமி

பூச்சூடிக் கொள்வதும் பொட்டிட்டுக் கொள்வதும்
மான்பார்க்கும் விழிகளில் மையிட்டுக் கொள்வதும்
தையலுக் குரிய தலையலங் காரம்!

கைவண்ண மெல்லாம் கலையலங் காரம்!
கற்பனை யெல்லாம் கவியலங் காரம்!

முற்றிய மஞ்சளை முகத்தில் பூசி
அழகு பார்த்ததோ அந்தக் காலம்!
நறுமணம் வீசும் நல்ல பவுடரை
எடுத்துப் பூசுதல் இந்தக் காலம்!

நாக ரீக நடிகை ராஜஸ்ரீ
பூப்போன்ற முகத்தில் பூசிக் கொள்ள
வாங்கும் பவுடரோ வாசமில் லாதது.
பூசும் முறையோ புதுமை யானது.

செவ்வாய் திறந்து சிரிக்கும் நடிகை
எவ்வாறு பூசிக் கொள்கிறார் என்றால்
மணமற்ற பவுடரை மணிக்கட்டில் முதலில்
தெலுங்கு நடிகை தேய்த்துப் பார்க்கிறார்.

சிறிது நேரம் தேய்த்துப் பார்த்தபின்
சீர்கொண்ட முகத்தை நீர்கொண்டு கழுவி,
அந்தப் பவுடரை அரைமணி நேரம்
முத்திரை படாத முகத்தில் தேய்த்து
மின்னல் நடிகை மெருகேற்றிக் கொள்கிறாள்!

போலிப் பொருள்களை மூலப் பொருள்களாய்க்
கருதக் கூடிய காலமிது வாதலால்,
ஆசைவெறி கொண்ட அலங்கார உலகம்
உருவத்தை ஒதுக்கி நிழலையே நம்பும்!
மணந்தரக் கூடிய மலர்கள் இருந்தும்,
காகிதப் பூவுக்கே கௌரவம் கொடுக்கும்!

வெறியும் மயக்கமும் விலகிடும் போது
நல்லது கெட்டது நன்றாகப் புரியும்.
இப்போது மதிப்பதை அப்போது தப்பென்று
உணரும் காலம் ஒருநாள் யார்க்கும்
வரலாம். இவர்க்கும் வரலாம் அல்லவா!

தமிழில் நடிக்க மாட்டேன்

பதரிருந் தாலும் செந்நெல் பயன்படும்!
பாசி இருப்பினும் தண்ணீர் பயன்படும்!
பொன்னையும் பயன்படும் பொருளையும் ஒருவன்,
வேண்டாத காரணம் கூறி வெறுப்பதோ,
தனது வளர்ச்சியைத் தானே தடுப்பதாம்!

வானவில் நடிகை வாணிஸ்ரீ என்பவர்,
தமிழ்ப்பட உலகின் தங்கத் தாரகை
எனினும் அவரோ, "இனிநான் இந்தத்
தமிழ்ப்பட உலகில் தலைகாட்டப் போவதே
இல்லை" என்கிறார்! ஏனென்று கேட்டால்–

"நானோ ராசி இல்லாத நடிகையாம்!
நானொரு படத்தில் நடித்தால் அப்படம்
பப்பட மாகுமாம்! பயனின்றிப் போகுமாம்!
அதனால் தமிழ்ப்பட அதிபர்கள் என்னைக்

கசக்கும் வேம்பெனக் கருது கின்றனர்!"
என்று சொல்கிறார். எனினும், இங்கே—
கழித்தல் நடிகையாய்க் கருதப் பட்டவர்,
தித்திக்கும் தெலுங்குத் திரைப்பட உலகில்,
கூட்டல் நடிகையாய்க் கொண்டாடப் படுகிறார்!

இங்கோ, ராசி இல்லாத நடிகை!
அங்கோ, இவர்தான் அதிர்ஷ்ட நட் சத்திரம்!
இங்கே தளர்ச்சியாம்! அங்கே வளர்ச்சியாம்!

இனிப்பாய் இருந்தும் இங்கே கசந்தது;
தெலுங்கு நாட்டிலே தித்திக் கின்றது!

இனிக்கக் கூடிய கரும்பு கசக்குமோ
வாய்க் குற்றம் உடையோர்க்கு அன்றிக்
கணுவுள்ள கரும்பு கசப்ப தில்லையே!

எம்.ஜி.ஆரின் அதிர்ஷ்டம்

பிறர்உதவி யின்றிப் பிழைக்க முடியாமல்
தவிக்கும் குருடர்கள் சங்கநிதிக் காகச்
சென்னையில் ஒருநாள், சிசுபாலன் என்னும்

நாடகம் எம்.ஜி.ஆர். தலைமையில் நடந்தது.
அந்த நாடகம் அன்று நடக்குமுன்
விழாமலர் முதலில் வெளியிடப்பட்டது.

உருவாக்கப் பட்ட ஒவ்வொரு மலரின்
மேலட்டை மீது மிகமிகத் தெளிவாய்
எழுதப் பட்ட எண்கள் இருந்தன.

அந்த எண்களில் அதிர்ஷ்டம் உடையஎண்
எதுவோ அதற்குப் பரிசுண் டென்பதால்,
அரங்கத்தில் இருந்த அத்தனை பேரும்
வெளியிட்ட மலரை விரும்பி வாங்கினர்.

புகழ்பெற்று விளங்கும் பொன்மனச் செம்மல்தம்
தலைமை உரையில், கண்கெட்ட குருடரின்
நிலைமையை விளக்கி நெடுநேரம் பேசினார்.

"இந்த நிதிக்குநான் இருபத்தை யாயிரம்
தாராள மாகத் தருகிறேன்" என்று
கூறி முடித்துக் கும்பிட் டமர்ந்தார்.

முத்திரைப் பேச்சு முடிவுற்ற பின்னர்,
சங்கத் தலைவர் சபையிலே நின்று,
எண்கொண்ட மலர்கள் எத்தனை இருப்பினும்
ஒன்றுதான் பரிசுக் குரியதென் றுரைத்தார்.

அதன்பின்னர் செளகார் ஜானகி அவர்கள்,
பரிசுச் சீட்டைப் பலமுறை குலுக்கி,
ஒரேஒரு சீட்டை உடனே எடுத்தார்.

எடுத்த சீட்டில் இருந்த எண்களே
எம்.ஜி.ஆர். வாங்கிய மலரிலும் இருந்ததால்
அந்தப் பரிசை அவர்தான் பெற்றார்!

அதுவாகத் தேடி வருவதே அதிர்ஷ்டமாம்!
அதிர்ஷ்டமில் லாதவர் வாழ்வே கஷ்டமாம்!
அது – இஷ்ட மாய்வரும் அதிர்ஷ்டம்
அவரைத் தேடித்தான் அன்றும் வந்தது!

அந்த
அழகியின் கால்கள்

நடுங்குநீர்க் கடலில் நங்கூர மிட்டுக்
கப்பலை நிறுத்தினும் அந்தக் கப்பல்,
ஆனை அசைதல்போல் அசைந்தபடி இருக்கும்

அதுபோல் திரைப்பட அழகி நிர்மலா
ஒய்யாரக் கட்டிலில் உட்கார்ந் திருப்பினும்
பட்டு மெத்தையில்
படுத்துக்கொண் டிருப்பினும்,
அவரது கால்கள் அசைந்துகொண்டிருக்குமாம்!

சென்று பேசச் செல்பவர், அமைதியாய்
நின்று பேசுவர். அதுபோல நிர்மலா
நின்று பேசாமல் நிதானமாய் நடந்து
கொண்டே பேசிக் கொண்டுசெல் வாராம்!

அடிக்கடி இமைகள் அசைதல் போலே,
அடிக்கடி கால்களை ஆட்டிக் கெண்டே
இருப்பது வழக்கமாம்! புன்னகை
விரிப்பது வழக்கமாம் விரும்புவோ ரிடத்திலே!

இளநீரும்

எலுமிச்சம் பழமும்

காதில் வளையமும், கரத்தில் வளையலும்
கோதி முடிக்கும் கூந்தலில் மலர்களும்
வைத்து, நெற்றி வாசலில் குங்கும
வட்டம் காட்டி, வண்டியில் ஏறிப்
பின்னணி பாடப் புறப்பட்டுப் போகும்

சுசீலா வுக்கோ, தொட்டில் சங்கீதம்
பாடுவதில் விருப்பமாம்! நடிகை பத்மினிக்கோ
ஆடுவதில் விருப்பமாம்! அழகி பாரதிக்கோ,

வண்டுகள் கிண்டும் மல்லிகைப் பூவைக்
கொண்டுவரச் சொல்லிக் கூந்தலில் வைத்துக்
கொள்வதில் என்றுமே குறையாத விருப்பமாம்

நேருவின் ஆட்சியில் நிலாவென விளங்கிய
தாரா கேசுவரி சின்கா வுக்கோ,
இந்திரா காந்தியை எதிர்ப்பதில் விருப்பமாம்!

விழிகளில் குளத்துமீன் விளம்பரம் காட்டி
இடுகுறி இதழ்களில் இளங்கனி காட்டிக்
கழுத்துக்குக் கீழே காய்களைக் காட்டி,

இழைத்தநன் னூலை இடைதனில் காட்டிப்
படங்களில் நடிக்கும் பாவைஜெய மாலா
எனும்நடி கைக்கோ இளநீ ரதனில்,

இயற்கையாய்த் திரண்ட எலுமிச்சம்பழத்தின்
சாற்றைப் பிழிந்தும் சர்க்கரை கலந்தும்
குடிப்பதில் விருப்பமாம்! பலமுறை
குளிப்பதில் விருப்பமாம் குளிர்ந்த நீரிலே!

அன்றுதான் எனக்கு நாணம் வந்தது

பருவம் என்பது காலத்தின் பக்குவம்.

பெண்ணுக் கமைந்திடும் பேதைப் பருவமோ,
நிமிர்ந்து வளரும் நெற்பயிர் போன்றது.

மணமாலைக் குரிய மங்கைப் பருவமோ,
நிதானமாய்க் குனியும் நெற்கதிர் போன்றது.

மாதர்க் கெல்லாம் மங்கைப் பருவமே
எச்சில் முத்தத்திற் கேற்ற பருவம்!
அந்தப் பருவம் வந்த உடனே
நங்கையர்க் கெல்லாம் நாண மேற்படும்.

நாணமே பெண்மைக்கு நல்ல மதிப்புரை.
திருமண வாழ்க்கையே சிறந்த பதிப்புரை.

ஓரெட்டில் உணவும், ஈரெட்டில் கல்வியும்,
மூவெட்டில் புதல்வனும், நாலெட்டில் பொருளும்,
ஐயெட்டில் ஞானமும், அடைவதே சிறப்பாம்!
இன்ப வாழ்வுக் கிவையே குறிப்பாம்!

மலர்போல் மலர்ந்த மங்கைக்கு விரைவில்
திருமணம் செய்வதே சிறப்பாம்! அதனைத்
தள்ளி வைப்பதே தனிமைக்கு நெருப்பாம்!

தக்க வயது தாண்டிய பின்னர்,
நங்கை ஒருத்திக்கு நடைபெறும் திருமணம்
ஆறிப் போன சோறு போன்றது.

மூடித் திறந்து முன்னழகு காட்டியும்,
பிரச்சினைக் குரிய பின்னழகு காட்டியும்,
பக்குவ மாகப் படங்களில் நடிக்கும்

சக்கரைக் கட்டியாம் சரோஜா தேவியோ,
காதல் புரியும் காட்சிபல வற்றில்
நெருங்கி நடிக்கும் நேரந் தன்னிலும்,
கூச்சமோ நாணமோ கொண்ட தில்லையாம்!

ஆளான வயதில் ஆகாமல் நடிகைக்கு
நாளான வயதில் நடந்ததே திருமணம்,
அன்றுதான் நாணம் அவருக்கு வந்ததாம்!

என்றும் அவரிடம் எழாத நாணம்
அன்று மட்டும் அவர்க்கேன் வந்ததோ
தெரியவில்லை! தெரிந்தும் பயனிலை!

இடியப்பம் விற்காமல் இரவிலும் பகலிலும்
அடியப்பம் விற்கும் அழுக்கு நடிகையர்
கையாளு கின்ற கற்பும் நாணமும்,
களிப்பும் சிரிப்பும் கடைசி வரையில்
நிலைக்கும் என்பது நிச்சய மில்லையே!

தாலி சிலுவையில்

நின்று தளராது நிமிர்ந்து வளரும்
பனைமரத் திற்குப் பலபெய ருண்டு!

மரங்கொல் தச்சரும், மலைக்குகைச் சித்தரும்,
தடித்த பனையைத்'தால'மென் றழைத்தனர்.
புலவர்கள் அதனைப் 'புற்பதி' என்றனர்.
கொக்கோகக் கவிஞர்கள் கூந்தற் பனைக்குப்
'பெண்ணை' என்றே பெயரிட லாயினர்.

குருத்தோலைப் பனைமரம் கூட்டம் கூட்டமாய்
ஆற்றங் கரையின் அருகில் வளர்ந்ததால்
'வடபெண்ணை' என்றும் 'தென்பெண்ணை' என்றும்,
பேராறு கட்குப் பெயரிட லாயினர்.

தங்கத்தால் இன்றுநாம் தாலி செய்கிறோம்.
பண்டைய நாளிலோ பழம்படு பனையின்
ஓலையைக் கொண்டே தாலிசெய் தார்களாம்.

காதுக்கும் ஓலையாம்; கழுத்துக்கும் ஓலையாம்;
ஓலைத் தாலியே ஒப்பந்தத் தாலியாம்.

தங்கத் தாலிக்குத் தனிப்பெருமை வந்தபின்,
புகழ்பெற்று விளங்கிய புலிப்பல் தாலியும்,
ஓலைத் தாலியும் ஒதுங்கிக் கொண்டன.

அரிச்சந்திர மன்னன் அரசாண்ட நாளில்,
ஊரறி யாமலே 'உட்தாலி' கட்டும்
வழக்க மிருந்து வந்த தாகவும்,
அல்லி ராணி அரசாண்ட நாளில்,

அந்த வழக்கம் அறவே மறைந்துபோய்
இன்றுள்ள வழக்கம் ஏற்பட்ட தாகவும்
தென்னாட்டுச் சுவடிகள் தெரிவிக் கின்றன.

தாலத்தால் ஆனதால் தாலி எனும்பெயர்
அதற்கு வந்ததாய் அறிஞர்கள் கூறினும்,
தான் +நீ எனுஞ்சொல் தாலியென் றாகி
இருக்கலாம் என்பதே என்கருத் தாகும்.

நான்நீ தனித்தனி, நங்கையே இன்று
தான்நீ எனக்குநீ தையல் உனக்குநான்;
நான்தான் நீ—இனி நான்தான் நீ—யெனும்
தத்துவ விளக்கமே தங்கத் தாலியாம்!

தாலியே பெண்ணுக்கு வேலியாம்! அத்தகு
வேலிவோர் ஆணுக்கும் வேண்டு மல்லவா?

அந்த நாள்முதல் இந்தநாள் வரையில்,
ஆண்தானே பெண்ணுக்கு வேலி
அடைக்கிறான்!
அவள்தானே வேலிக்குள் அடைபட்டுக்
கிடக்கிறாள்!

"தாலியாம்! தாலியே பெண்ணுக்கு வேலியாம்!
வேலி யாவது வெங்காய மாவது?
சுயநலங் கருதியும், சுகத்தைக் கருதியும்,

ஆண்கள் பெண்களை அடக்கிவைத் திருக்கக்
கண்டு பிடித்த கருவிதான் தாலி"
என்றுநம் பெரியார் எதிர்த்து வந்ததால்
திருமண முறையில் திருத்தமேற் பட்டது.

பெரியார் இயக்கம் தோன்றிய பின்னரே,
தையலின் கழுத்தில் தாலிகட் டாமலும்
நம்நாட்டில் திருமணம் நடைபெறக் காண்கிறோம்.

நம்பிக் கைவைக்கும் நடிகர்கள் மீது
நம்பிக்கை வைக்கும் நடிகைஜெய பாரதி
அணிந்துகொண் டிருக்கும் அழகான தாலியில்
அருள்தரும் சிலுவை அடையாள முள்ளதாம்.

மனிதன் உண்டாக்கும் மதங்களும், அந்த
மதங்கள் தொகுத்து வகுத்த குறிகளும்,
விவாதத்திற் குரிய விளம்பரக் கோடுகள்!

அந்தக் கோடுகள் காலத்தால் அழியலாம்!
அவற்றைநாம் விரும்பாத போதும் அழிக்கலாம்!

பொய்க்குறி மறைந்து போகலாம்! புகழெனும்
மெய்க்குறி மறைந்து விடுவ தில்லையே!

நான் மழையில் நனைந்து விட்டேன்

வற்றாத மேகம் வாயைத் திறந்தால்
ஊசிபோல் மின்னல் உடனே தோன்றும்.

விம்மி விம்மி மேகங்கள் அழுதால்
நல்ல மழைநீர் நமக்கெல்லாம் கிடைக்கும்.

வான்மழை, உலகினை வாழ வைப்பதால்
அம்மழை புவிக்கே அமுத மாகும்.

அரிசி விற்றிடும் அந்தணர்க் கோர்மழை,
புருடனைக் கொன்ற பூவையர்க் கோர்மழை,
வரிசை தப்பிய மன்னருக் கோர்மழை
வருடம் மூன்று மழையெனப் பெய்யுமே

என்றொரு புலவர் பாடி யிருப்பினும்
அந்தணர்க் காகவோ, அரசர்க் காகவோ,
பத்தினிக் காகவோ, பரத்தையர்க் காகவோ,
வானம் தனிமழை வழங்குவ தில்லை!

பருவமழை பொய்த்தால் பஞ்சம் வந்திடும்.
பஞ்சம் வந்திடின் பட்டினி பரவும்.

செத்தும் கொடுத்த சீதக் காதி
வள்ளல் என்பான் வாழ்ந்த நாளில்,
கார்தட்டுப் பட்டதாம்! கார்தட்டுப் பட்டதால்
ஓர்தட்டில் பொன்னும் ஓர்தட்டில் நெல்லும்
ஒக்க விற்றதாம் ஒவ்வோர் ஊரிலும்!

எடுப்பதைக் காட்டினும் கொடுப்பது நல்லது.
காய்வதைக் காட்டிலும் நனைவது நல்லது.

மழையில் தென்னை மரங்கள் நனையலாம்;
மலையும் நனையலாம்; சிலையும் நனையலாம்
காடும் நனையலாம்; வீடும் நனையலாம்.

கண்ணீரில் அடிக்கடி நனைவதைக் காட்டினும்
மங்கை ஒருத்தி மழையில் நனையலாம்.

கைவண்டி இழுக்கும் கந்தனோ முனியனோ
குப்பனோ அன்னவன் அப்பனோ நனைந்தால்,
நனைந்த செய்தி நாளேட்டில் வருமா?

மந்திரி மீதிலோர் மழைத்துளி வீழினும்
அவரது படத்தோ டச்செய்தி வெளிவரும்!

ஔவையார் ஒருநாள் அந்தி மாலையில்
திருக்கோயி லூர்க்குச் சென்றுகொண் டிருக்கையில்
அடைமழை பெய்ததாம். அம்மழை தன்னில்
நல்வழி ஔவையார் நனைந்துவிட் டாராம்.

போலி ரவிக்கைப் பொட்டலம் காட்டும்
ஒய்யார நடிகை உஷாநந் தினியும்
நல்ல மழையில் நனைந்தாராம் ஓர்நாள்.

பலவேஷம் போடும் பகட்டு நடிகைக்கு
ஜலதோஷம் பிடித்ததாம்! தலைவலி எடுத்ததாம்!

நமது திரைப்பட நடிகையர் ஒருசிலர்,
உடம்பு வலித்தால் உடனே சொல்லுவர்.
தலைவலி வரினும் தவறாமல் கூறுவர்.
விவகாரம் முற்றி வேறுவலி எடுத்தால்,
பலரிடம் நெருங்கிப் பழகும் நடிகையர்
சுலபமாய் அதனைச் சொல்லமாட் டார்களே!

நான் இரண்டு முறை குளிக்கிறேன்

தீக்கனாக் கண்டால்; சிற்றின்பம் நுகர்ந்தால்;
உருட்டி உருட்டிநாம் உண்ணும் உணவை
வாந்தி எடுத்தால்; மயிர்களைந்து கொண்டால்;
நெடும்பொழு துறங்கினால் நீராட வேண்டும்
என்கிறார் பெருவாயின் முள்ளியார் என்பவர்.

போலிச் சடங்கையும், புராணப் புரட்டையும்,
மௌடீக சாதி மதத்தையும் எதிர்த்துப்
போராட வேண்டுமே யன்றிநாம் போய்போய்ச்
சேறாடும் குளத்தில் நீராட வேண்டுமா?
என்று கேட்கிறார் ஈரோட்டுப் பெரியார்.

நீரிலே பிறந்து நீரிலே வாழும்
மீனினம் நீராட வேண்டுவ தில்லை.

நிலத்திலே பிறந்து நிலத்திலே வாழும்நாம்
குளத்திலோ ஆற்றிலோ குளிக்க வில்லையேல்,
மேனி அழுக்கும், வியர்வை நாற்றமும்,
போகுமா? போகவே போகா தாதலின்
அன்றாடம் குளிப்ப தவசிய மாகும்.

பிழைபுரி யாத பெருந்தலைவ ராக
விளங்கிய சர்தார் வேத ரத்தினம்
அவர்களும், டாக்டர் அம்பேத்கார் அவர்களும்,
தாழ்த்தப் படாமல் தானே தாழ்ந்துள
நீலக் கடலில் நீந்துதல் வழக்கமாம்!

அன்றைய சேதுபதி அரசருள் ஒருவர்,
உப்புக் கடலிலும் ஓடும் நதியிலும்,
நீண்ட நேரம் நீராடு வாராம்!

கள்ளும் காமமும் களிப்பதற் கிருந்தும்,
குளமும் நதியும் குளிப்பதற் கிருந்தும்,
கள்ளுண்டு ஞானியர் களிப்பது மில்லை!
எஸ்கிமோ மக்கள் குளிப்பது மில்லை!

பனிக்கட்டி அரசன் பதினான்காம் லூயி
சிறப்பு நிகழ்ச்சிக்குச் செல்கையில் மட்டுமே
கரத்தையும் முகத்தையும் கழுவிக்கொள் வானாம்!
ஆண்டுக்கோர் முறையே அவன்குளிப் பானாம்!

பிரஷ்யநாட் டரசன் பிரெட்ரிக் என்பான்,
நித்திரைக் கேற்ற நிலாவரும் வேளையில்,
சித்திரக் கட்டிலில் சிற்றிடை மாதர்க்குக்
குத்தகை முத்தம் கொடுத்துக் கொடுத்துக்
களித்ததே யன்றிக் குளித்ததே இல்லையாம்!

ஆண்டுக் கொருமுறை குளிக்கும் அரசனும்,
என்றுமே குளித்திடா எஸ்கிமோ மக்களும்,
அந்நாட்டில் இருக்கலாம்! இந்நாட்டில் இல்லை!

எந்நாட்டு மக்கள் குளிக்கா திருப்பினும்
தென்னாட்டு மக்கள் தினந்தொறும் குளிப்பர்,
முனியம்மா கருவுற்று முழுகா திருப்பினும்
அவளும் மூழ்கி ஆற்றில்நீ ராடுவாள்!

சூடும் புதுமலர்ச் சுமைகொண்ட கூந்தற்
காடு நனைந்திடக் காமக் குரும்பை
மேடு நனைந்திட, மேனி நனைந்திடக்
காம சமுத்திரக் கதவு நனைந்திடக்
கன்னிய ரெல்லாம் காலையில் குளிப்பர்,
காகமும் இங்கே காலையில் குளிக்கும்.

எழிலரசி கிளியோ பாத்ரா என்பவள்,
கலப்பட மற்ற கழுதைப் பாலில்
குளிரக் குளிரக் குளிப்பது வழக்கமாம்!

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளவும்,
கதவுள்ள போதே சாத்திக் கொள்ளவும்,

நன்கு தெரிந்த நடிகைசந் திரிகா
நித்தம் இருமுறை நீராடு வாராம்!

விடிந்ததும் ஒருமுறை வெந்நீரில் குளியலாம்!
எல்லாம் முடிந்தபின் இன்னொரு குளியலாம்!

ஒருசில நடிகையர் ஒவ்வொரு நாளும்
வீட்டிலோ, வெளியிலோ, வெவ்வே றிடத்திலோ,
அதனால் இதனால் அழுக்கடை வதனால்,
நாள்தொறும் பலமுறை குளிப்பது நன்மைதான்.
புறவுடல் அழுக்கெல்லாம் போவதும் உண்மைதான்.

எனினும் சற்றே இதனைக் கேளீர்:
ஆடை பாதியும் அழகு பாதியும்
தெரியக் காட்டும் திரைப்பட நடிகையோ
அறிஞனோ, கலைஞனோ, அரசியல் தலைவனோ,

மடாதி பதியோ, மக்கள் திலகமோ,
கோப்பைக் கவிஞனோ, கோயில் குருக்களோ,
மற்றிங்கு வாழும் மக்கள் கூட்டமோ,
ஆயிரம் தடவை அன்றாடம் குளிப்பினும்

மிகத்தூய்மை பெறுவது மேனியே யன்றி
அகத்தூய்மை நீரால் அமைவ தில்லையே!

நான் முயல் வளர்க்கிறேன்

மன்னன் துஷ்யந்தன் மனைவி சகுந்தலை
மாளிகை தன்னில் மான்வளர்த் தாளாம்.

வரதுங்க ராம பாண்டியன் மனைவி
மரகதப் பச்சை மயில்வளர்த் தாளாம்.

காவல் காக்கவும் ஆவல் தீர்க்கவும்
நடிகைகண் ணாம்பா நாயொன்று வளர்த்தார்.

விமானப் பணிப்பெண் வேலையில் இருந்த
காலத்தி லிருந்தே நடிகை காஞ்சனா,
நல்ல ஜாதி நாய்க்குட்டி வளர்க்கிறார்

அழகி ஜமுனா அணிற்பிள்ளை வளர்க்கிறார்.
வெண்ணிலா மிதக்கும் வேளையில், ஜமுனா
கண்ணுறங் குவதோ கட்டில் ஒன்றிலாம்.
அவரது வீடே அணிலாடு முன்றிலாம்.

குமாரி உஷாவோ குரங்கு வளர்க்கிறார்.
அடிக்கடி இரவில்நீ ராடக் கூடிய
குமாரியின் வீடொரு 'குரங்காடு துறையாம்'

நச்சினார்க் கினிய நடிகை சச்சுவோ
தும்பைப்பூ போன்ற சுண்டெலி வளர்க்கிறார்.

திருமணம் ஒருமுறை, மறுமணம் ஒருமுறை,
ஆவல்தீ ராததால் அடுத்தும் ஒருமுறை
'பச்சைத் திருமணம்' பண்ணிக் கொண்ட
விஜய நிர்மலா வெண்முயல் வளர்க்கிறார்.

விநோத நடிகையின் வீட்டில் வளரும்
சலவை முயலுக்குத் தழைகளே சாதமாம்!
ஐந்தாறு கனிகளே அதற்குப் போதுமாம்!

கால்விரல் நகங்களே அதற்குக் கத்தியாம்.
அழகியின் மடியே அதற்கு மெத்தையாம்.

நீண்ட செவிகளும் நெல்லிக்காய் விழிகளும்,
வெடித்த பருத்திபோல் வெள்ளை நிறமும்
கொண்ட சிறுமுயல் குதித்துக் குதித்து
விளையாடும் காட்சியை வேடிக்கை பார்ப்பதே
பூச்சர நடிகையின் பொழுது போக்காம்.

மானை வளர்ப்பதும், மயிலை வளர்ப்பதும்
குமாரி ஒருத்தி குரங்கை வளர்ப்பதும்,
அழகி ஒருத்தி அணிலை வளர்ப்பதும்,

இட்டிலி சுடுபவள் எட்டெலி வளர்ப்பதும்,
முத்திரை நடிகை முயலை வளர்ப்பதும்,
பொருளா தாரப் பொறுப்பில் லாத்தனம்.

ஆளுங் கட்சியும் அதனெதிர்க் கட்சியும்,
போன்ற தாகிய பூனையை எலியைக்
குரங்குக் குட்டியை குழிமுயல் தன்னைத்

தொங்கும் மாவிலைத் தோரணம் போன்று
பறந்து செல்லும் பச்சைக் கிளிகளை
வளர்ப்பதால் நமக்கு வரும்பயன் என்ன?

பெரும்பாலும் இன்று பிறக்கும் குழந்தைகள்
தாய்ப்பால் இன்றித் தவிப்பதைப் பார்க்கிறோம்.

தாய்ப்பால் இன்றித் தவிக்கும் குழந்தைக்கு
நாய்ப்பால் உதவுமா? நலிவுற்ற குழந்தை
பசுப்பால் இருந்தால் பருகு மல்லவா?
பசுவை வளர்த்தால் பயனுண் டல்லவா?

ஆடு வளர்ப்பதும் மாடு வளர்ப்பதும்
அவரவர் விருப்பமே ஆயினும் நடிகையர்
இருநூ ரெலிகளை வளர்ப்பதால் என்பயன்?
ஒருபசு வளர்ப்பினும் உபயோகம் உண்டே!

மார்பில் எனக்கு மச்சமிருக்கிறது

மறுவென்றால் களங்கம்; மருவென்றால் மச்சம்;
மறுவோ, வெண்ணிலா வயிற்றில் இருக்கும்.
மச்சமோ, ஒருசிலர் மார்பிலும், தோளிலும்,
தொடையிலும் இடையிலும் தூங்கிக்கொண் டிருக்கும்.

இறவாத புகழே சிறந்த எச்சமாம்.
தானே தோன்றும் தழும்பே மச்சமாம்.

மலர்ந்தமே லுதட்டில் மச்ச மிருப்பின்
பேச்சு வன்மை பெற்று விளங்குவான்
என்று கூறுவர். இஃதுண்மை யாயின்
அக்குன் றக்குடி அடிகளார் உதட்டிலும்,
ம.பொ.சி. உதட்டிலும் மச்சமா உள்ளது?

வாயித ழோரம் மச்ச மிருப்பின்
அண்டப் புளுகன் ஆவான் என்பர்.
இதனையும் ஏற்பதற் கில்லை; ஏனெனில்
இதழோரம் மச்சம் இல்லா திருந்தும்
அரசியல் வாதிகள் அத்தனை பேரும்
பொருத்த மாகப் புளுக வில்லையா?

நல்லதோர் மச்சம் நடுமுதுகில் இருப்பின்
அரசாளு வானாம்! அத்தகைய மச்சம்
என்தந்தை முதுகினில் இருந்தும், அவரோ
கைத்தறி நெய்தே காலந் தள்ளினார்
அன்றி இங்கவர் அரசாள வில்லையே!

மக்கள் ஒருவனை மந்திரி யாக்கலாம்.
மச்சமா ஒருவனை மந்திரி யாக்கும்?
ஆக்கா தென்பதை அறிக! அசைவிலா
ஊக்கமே ஒருவனை உயர்த்துமென் றறிக!

பார்புகழ் வள்ளலாம் பச்சை யப்ப
முதலியார் முதுகிலும், அக்பரின் மூக்கிலும்,
இட்ட புள்ளிபோல் இருந்ததாம் மச்சம்!

கன்னி ஒருத்தியின் காமப் படத்திலே
மச்ச மிருப்பின் மயக்குவாள் என்றும்,
மார்பில் ஒருத்திக்கு மச்ச மிருப்பின்
அவளொரு பணக்காரி ஆவாள் என்றும்,
சொல்லுவ தெல்லாம் சுத்த மடத்தனம்!

அமெரிக்க நடிகையாம் ஆர்லீன் டாலின்
எச்சில் உதட்டிலோர் மச்சம் உள்ளதாம்!

அறிமுக மான துறைமுகம் போன்ற
பாரதி என்னும் பால்நிலா நடிகையின்
மார்பின் மீதிலோர் மச்சம் உள்ளதாம்!

மேனாட்டு நடிகைக்கு மேலே மச்சமாம்!
கீழ்நாட்டு நடிகைக்குக் கீழே மச்சமாம்!

மச்ச மிருந்தென்ன? மங்கையர் கெல்லாம்
அச்சமும் நாணமும் அல்லவா வேண்டும்?

நாணத்தைக் காட்டெனில் ஏனத்தைக் காட்டும்
நங்கையர் இடத்திலோ, நடிகையர் இடத்திலோ,
சுவைக்குத வாத கவர்ச்சியைத் தவிர
இவற்றை நாமெதிர் பார்ப்பதற் கில்லையே!

வேண்டும் எனக்கொரு மகன்

உறவில் உருவாகும் ஒவ்வொரு குழந்தையும்,
அடக்க முடியாத உணர்ச்சியின் அறுவடை
அதனைத் தடுக்கும் அணையே கருத்தடை.

ஒன்றுக்குப் பிறகு இப்போது வேண்டாம்.
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்.
என்றறி வுறுத்தும் இன்றைய நாளில்,
மணமாலை யிட்ட மங்கை ஒருத்தி,
ஆண்டுமூன் றாகுமுன் அன்னை யாவதும்,
அரும்புபோல் குழந்தைகள் ஐந்தாறு பெறுவதும்,
குடும்ப நலத்தைக் குலைக்கும் செய்கையாம்!

குறைந்தசட் டங்களும் நிறைந்த உரிமையும்,
உள்ள நாடே நல்ல நாடாம்.
ஓரிரு குழந்தைகள் உள்ள வீடே
குடும்ப நலங்கள் குறையாத வீடாம்.

மகவைப் பெறாத மலடியை, வைதீக
வடமொழி யாளர் வந்தியென் றழைப்பர்.

கருங்குயில் முட்டையைக் காக்கையடை காத்தல்போல்
அடுத்தவள் குழந்தையை எடுத்து வளர்ப்பவள்,

காக வந்தியாம். கனிதரக் கூடிய
வாழையோ தாறொன்று வழங்குதல் போல,

வாழ்வில் ஒரேவொரு மகவைப் பெறுபவள்
கதலி வந்தியாம். கண்ணும் கருத்துமாய்

ஈன்ற குழந்தைகள் அனைத்தையும் இழந்து
வேதனைப் படுபவள் மிருத வந்தியாம்.

மன்னன் கரிகாற் சோழனின் மனைவி
பெண்குழந்தை ஒன்றை மட்டுமே பெற்றவள்.

வாரி வழங்கிய பாரியின் மனைவி
இரண்டு பெண்களை மட்டுமே ஈன்றவள்.

கம்பன் மனைவியோ, அம்பிகா பதியெனும்
ஆணையும் அடுத்தொரு பெண்ணையும் பெற்றவள்.

உண்டைக் கட்டிக்குத் துண்டு விரித்த
குடுமிப் பார்ப்பனக் குசேலன் மனைவி
ஈன்ற குழந்தைகள் இருபத் தேழாம்!
கோவலன் மனைவிக்குக் குழந்தையே இல்லை!

கழித்தலாய் இருந்து, கல்யாண மானபின்
கூட்டலாய் மாறிக் குடும்பம் நடத்தும்
'கிசுகிசு' நடிகை கே. ஆர். விஜயா
பெண்குழந்தை ஒன்று பெற்றுள்ள போதிலும்,
ஆண்குழந்தை ஒன்றும் அவரபெற வேண்டுமாம்.

பெண்ணொன்று பெற்றபின் ஆணொன்று பெறவும்,
ஆணொன்று பெற்றபின் அடுத்தொன்று பெறவும்,
அடுத்தொன்று பெற்றபின் அடிக்கடி பெறவும்,
ஆசைப் படுவதும் அவசரப் படுவதும்,
ஒப்ப முடியாத தப்பித மாகும்.

ஆசைக்கோர் பெண்ணும் ஆஸ்திக்கோர் பிள்ளையும்,
இருந்தாக வேண்டும் என்கின்ற எண்ணம்
இந்நாட்டில் இன்னும் இருந்து வருவதால்,
பூத்த குரவம் பூப்போன்ற வடிவில்
பெண்ணொன் றிருந்தும் பிள்ளை இல்லையே
என்றுசிலர் தினமும் ஏங்கு கின்றனர்

இல்லத்தில் ஆண்மக வில்லா திருப்பினும்,
எண்ணி மகிழவும் எடுத்துக் கொஞ்சவும்,
பெண்ணொன் றிருந்தால் பெற்றோர்க்குப் போதுமே!

என்மனம் என்றன் எண்ணம்
என்செயல் தமிழே என்பேன்!
என்குரல் என்றன் பாடல்
என்சுவை அதுவே என்பேன்!
என்கதை என்றன் காதல்
என்புகழ் அதனால் என்பேன்!
என்னுடல் என்றன் செல்வம்
என்னுயிர் அதற்கே என்பேன்!



அம்மா கணியகம்